

பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு194ல் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியின்கீழ் ரூ.99.95 லட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட வண்ணன்கேணி, தாச்சன் கேணி குளத்தினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் (25.10.2023) நேற்று முன்தினம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர். பிரியா, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ் குமார், தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித், சோழிங்கநல்லூர் மண்டலக்குழுத் தலைவர் வி.இ.மதியழகன் உட்பட பலர் இருந்தனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (26.10.2023) சென்னை, சூளை, திரௌபதி அம்மன் தர்மராஜா திருக்கோயிலில் கள ஆய்வு மேற்கொண்டு அத்திருக்கோயிலை புனரமைத்து, பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார். சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி ஜ. முல்லை, சென்னை மாவட்ட அறங்காவலர் தேர்வுக்குழு தலைவர் கே.எஸ். ரவிச்சந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் வேலு திருக்கோயில்களின் அறங்காவலர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தின் இலச்சினை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டார்!

சென்னை, அக். 27-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (26.10.2023) சென்னை, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தில், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தின் இலச்சினை வெளியிட்டு, தமிழ்நாடு கம்பெண்டியம் ஆஃப் கேஸ் ரிப்போர்ட்ஸ் (*Tamilnadu Compendium of Case Reports* (TCCR) எனும் பன்னாட்டு மருத்துவ ஆய்விதழ், நுண்ணுயிர் எதிர்ப்பு சிகிச்சை வழிகாட்டு நெறிமுறைகள் (*AntiMicrobial Therapy*) கையேடு மற்றும் மருத்துவ மேற்படிப்பு மாணவர்களுக்கான மாவட்ட உள்ளுறை பயிற்சித் திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மருத்துவமனைகளின் பட்டியல் ஆகியவற்றை வெளியிட்டு விழாப் பேருரையாற்றினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தின் இலச்சினை இன்று வெளியிடப்பட்டது. மருத்துவக் கல்வி இயக்ககம் எனும் தலைப்பில், 1966 ஆம் ஆண்டு 8 மருத்துவக் கல்லூரிகள், 18 மருத்துவமனைகள், 9 மருந்தகங்களுடன் இந்த இயக்குநரகம் தொடங்கப்பட்டது. தற்போது 36 மருத்துவக்கல்லூரிகள், 36 மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள், 2 பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைகள் என மொத்தம் 120 மருத்துவமனைகளுடன் இந்த துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சட்டப் பேரவையில் அறிவிப்பு எண்.95ன்படி "தமிழ்நாடு மருத்துவக் கல்வி இயக்ககம் தற்போது 36 மருத்துவக் கல்லூரிகள், மருத்துவமனைகள் மற்றும் அதனை சார்ந்த மருத்துவ நிலையங்களின் செயல்பாடுகளை உள்ளடக்கியதாக உள்ளது. மருத்துவ ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் விதமாக மருத்துவக் கல்வி இயக்ககம் இனி வருங்காலங்களில் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம்" என்ற பெயரில் செயல்படும் என்று அறிவிக்கப்பட்டது. பல்வேறு வகையான, கடுமையான நோய்களிலிருந்து பொது மக்களைக் காப்பது, வராமல் தடுப்பது போன்ற ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டு புதிய மருத்துவச் சிகிச்சை மற்றும் தடுப்பு முறைகளையும் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் வகையில் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககமாக தரம் உயர்த்தி இன்று இலச்சினை அறிமுகப்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு அரிய மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை அறிக்கைகளின் தொகுப்பான *Tamil Nadu Compendium of Case Reports* (TCCR) தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளின் சிறந்த கட்டமைப்பு, மருத்துவ சேவைகளின் தரம் மற்றும் நமது மருத்துவர்களின் திறமை மற்றும் அர்ப்பணிப்பு உணர்விற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இதன் மூலம், எதிர்வரும் காலங்களில் மருத்துவம் படிக்கும் மாணவர்கள் மற்றும் இளம் மருத்துவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் விதமாகவும் அரிய வகை நோய்கள், நோயின் தன்மைகள், நோய்களைக் கண்டறியும் முறைகள் மற்றும் சிகிச்சை முறைகள் தொடர்பான குறிப்புகள் இப்பதிப்பில் இடம்பெற்றுள்ளது.

மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தின் வழிக்காட்டு வெளியீடான நுண்ணுயிர் எதிர்ப்பு சிகிச்சை வழிகாட்டு நெறிமுறைகள் கையேடு (*Guidance to AntiMicrobial Therapy*) முதல் பிரதி இன்று வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மருத்துவர்கள் மற்றும் மருத்துவ மாணவர்கள் தொற்று நோய் சிகிச்சையின்போது எதிர்கொள்ளும் பல சவால்களை அறிந்துக்கொண்டு அதற்கான உரிய சிகிச்சையை அளித்திட இப்பதிப்பு உதவியாக இருக்கும். மேலும், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தின் பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கான மாவட்ட உள்ளிருப்பு பயிற்சி திட்டத்திற்கான மாவட்ட மருத்துவமனைகளின் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தின் கட்டிடம் மிகவும் பழமைவாய்ந்த சேதமடைந்த கட்டிடமாக இருந்தது, அது தற்போது புனரமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தின் இயக்குநர்கள் பல்வேறு சாதனைகள் செய்துள்ளனர். முதல் பெண் இயக்குநர் மரு. லலிதா காமேஸ்வரன் செயல்பட்டுள்ளார். அவரை தொடர்ந்து பல்வேறு இயக்குநர்கள் சிறப்பாக செயல்பட்டுள்ளனர். தற்போதைய மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சாந்திமலர் 34 ஆண்டுகள் 8 மாதம் சிறப்பாக மருத்துவத் துறையில் சேவையாற்றி, 31.10.2023 அன்று பணி ஓய்வு பெறவுள்ளார். அவர்களுக்கு மருத்துவத் துறையின் சார்பில் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது. மருத்துவத் துறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்வது அவசியமானதாகும், அந்தவகையில் மருத்துவக் கல்வி இயக்ககம் என்பது மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககமாக மாற்றப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தில், ரூ.100 கோடி செலவில் கலைஞர் நூற்றாண்டு மருத்துவ ஆராய்ச்சி கட்டிடம் விரைவில் அமையவிருக்கிறது. அதற்காக இடம் தேர்வு செய்யப்பட்டு, வடிவமைப்பு பணிகள் முடிவடைந்துள்ளது, விரைவில் ஒப்பந்தம் போடப்படவுள்ளது.

ஒன்றிய அரசின் ஒதுக்கீட்டின் கீழ் 6 இளங்கலை மருத்துவ இடங்கள் கடந்த ஆண்டு நிரப்பப்படாமல் இருந்தது. இந்த ஆண்டு ஒன்றிய அரசின் கீழ் 86 இடங்கள் நிரப்பப்படவுள்ளது. நிரப்பப்படாமல் இருக்கும் இடங்களை கலந்தாய்வு நடத்தி நிரப்ப வேண்டும், இல்லையென்றால் இதனை மாநில அரசின் ஒதுக்கீட்டிற்கு தர வேண்டும் என்கின்ற வகையில் கடிதம் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டது. அதற்கு இதுவரை பதில்கள் கிடைக்கவில்லை, துறையின் செயலாளர் இது தொடர்பாக ஒன்றிய அரசிடம் பேசிக் கொண்டிருக்கிறார். இந்த நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலைப்பெற்று உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடருவதற்கு சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து கொண்டிருக்கிறோம், விரைவில் நல்ல தீர்வு கிடைக்கும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.இரா.சாந்திமலர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு.சண்முகக்கனி, குடும்ப நலத்துறை இயக்குநர் மரு.ஹரிசுந்தரி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி தேர்வுக்குழுச் செயலாளர் மரு. அருணலதா மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

<u>சிதிலமடைந்த நிலையிலுள்ள திருக்கோயில்களை</u>

# புனரமைத்து, பாதுகாக்க துரித நடவடிக்கை!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுரை!

சென்னை, அக் 27-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (26.10.2023) சென்னை இணை ஆணையர் மண்டலம் 1 -ல் சிதிலமடைந்த நிலையிலுள்ள திருக்கோயில்களை புனரமைத்து திருப்பணிகள் மேற்கொள்ளும் வகையில் சென்னை, சூளை, வெங்கடாஜலபதி பரிபாலன சபா, லட்சுமி அம்மன் திருக்கோயில், தர்மராஜா திருக்கோயில், ஆஞ்சநேயர் திருக்கோயில், திரௌபதி அம்மன் தர்மராஜா திருக்கோயில், வேம்புலி அம்மன் திருக்கோயில், சுந்தரராஜ பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் கள ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறை தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களை தொன்மை மாறாமல் புனரமைத்து குடமுழுக்குகளை நடத்துதல், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து திருக்கோயில் சொத்துக்களை மீட்டெடுத்தல், வருவாய் இனங்களை பெருக்குதல் போன்ற பல்வேறு பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது. அது மட்டுமின்றி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும் தொன்மையான திருக்கோயில்களை புனரமைத்து பாதுகாப்பது தொடர்பாக அவ்வபோது கள ஆய்வு மேற்கொண்டு உரிய அறிவுரைகளை வழங்கி வருகிறார்.

அந்த வகையில், சென்னை மண்டல இணை ஆணையர் 1 -ல் சிதிலமடைந்த நிலையிலுள்ள 25 திருக்கோயில்கள் பட்டியலிடப்பட்டு அதில் முதற்கட்டமாக 7 திருக்கோயில்களில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு இன்று கள ஆய்வு மேற்கொண்டார். சென்னை, சூளை பகுதியைச் சேர்ந்த 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்கோயில்களான வெங்கடாஜலபதி பரிபாலன சபா, லட்சுமி அம்மன் திருக்கோயில், தர்மராஜா திருக்கோயில், திரௌபதி அம்மன் தர்மராஜா திருக்கோயில், வேம்புலி அம்மன் திருக்கோயில், சுந்தரராஜ பெருமாள் திருக்கோயில் மற்றும் ஆஞ்சநேயர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைப்பெற்று பல ஆண்டுகள் ஆகிவிட்டதாலும், திருக்கோயிலின் மேற்கூரை மற்றும் சுவர்கள் ஆலமர விழுதுகளால் சிதிலடைந்தள்ளதாலும் மண்டல மற்றும் மாநில வல்லுநர் குழுக்களின் பரிந்துரையின் அடிப்படையில் சிதிலமடைந்த திருக்கோயில்களை புனரமைத்திட திட்ட மதிப்பீடுகள் தயாரித்து, 2024 - 2025 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில் சேர்த்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அறிவுரைகள் வழங்கினார்.

மேலும், சூளை, லட்சுமி அம்மன் திருக்கோயில் சுற்றுச்சுவருக்கு உள்ளே பூங்கா நகர், சென்னமல்லீஸ்வரர் திருக்கோயிலின் அடிமனைதாரர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அமைக்கப்பட்டுள்ள கடைகள் மற்றும் இருப்புப் பட்டறைகள், திரௌபதி அம்மன் தர்மராஜா திருக்கோயில் சுற்றுச்சுவருக்கு உட்புறம் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள 10 கடைகள், வேம்புலி அம்மன் திருக்கோயிலின் சுற்றுச்சுவருக்கு முன்புறம் திருக்கோயில் மற்றும் அதற்கு செல்லும் பாதையை மறைக்கும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ள 2 கடைகள் ஆகியவற்றை சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுத்து அப்புறப்படுத்த வேண்டுமெனவும், தர்மராஜா திருக்கோயிலுக்கு எதிரே சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி சுவாதீனம் பெறப்பட்ட கந்தக்கோட்டம், முத்துகுமாரசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான கட்டிடத்தினை புனரமைத்து மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் தேவையான நடவடிக்கைளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

இந்த ஆய்வின்போது சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி ஜ. முல்லை, சென்னை மாவட்டக் குழு தலைவர் கே.எஸ். ரவிச்சந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் வேலு திருக்கோயில்களின் அறங்காவலர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

<u>தமிழ்நாட்டு மீனவர்களைக் கண்டு கொள்ளாத</u>

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மீனவரணியினர் ஆர்ப்பாட்டம்!

## கழக மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, அக். 27 -

தமிழ்நாட்டு மீனவர்கள் மீது அக்கறை செலுத்தாமல், ஒரு தலைபட்சமாகச் செயல்படும் ஒன்றிய, பா.ஜ.க. அரசைக் கண்டித்து கழக மீனவர் அணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் முதல்வர் அவர்களின் அனுமதி பெற்று நடத்தப்படும் என்று மாநில கழக மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பியுள்ள மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் மீனவ மக்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது வேதனையளிக்கிறது. இதுபோன்ற சம்பவங்களால் மீனவ சமுதாயக் குடும்பத்தினருக்குப் பொருளாதார இழப்புகள் ஏற்படுவதோடு, இத்தொழிலை நம்பியுள்ள எண்ணற்ற குடும்பத்தினரின் வாழ்வாதாரமும் பாதிக்கப் பட்டுள்ளது.

இந்தியா இலங்கை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்தை இந்திய பிரதமர் அவர்கள் துவங்கி வைத்த நாளிலும் நாகை, கோடியக்கரை மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் கொலை வெறி தாக்குதல் நடத்தியதோடு அவர்களின் தகவல் தொடர்பு சாதனங்கள், மீன்பிடிவலைகள், மீன்கள் என அத்தனை உடமைகளையும் கத்திமுனையில் பறித்து சென்றுள்ளது மிகுந்த கவலையளிக்கிறது.

கடந்த நான்கு மாதங்களாக இலங்கை கடற்கொள்ளையர்களின் அட்டூழியம் மிக அதிகரித்துள்ளதைத் தடுத்து நிறுத்த வேண்டும் இந்திய மீனவர்களின் மீதான கொலை வெறி தாக்குதல்கள் தொடராத வண்ணம் இந்திய ஒன்றிய அரசு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் தளபதியார் அவர்களுக்கு கழக மீனவர் அணி சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் கரத்தை வலுப்படுத்தும் வகையில் கழக மீனவர் அணியினர் ஒன்று திரண்டு தமிழ்நாட்டு மீனவர்கள் அக்கறை காட்டாமல் ஒரு தலைபட்சமாகச் செயல்பட்டு வரும் ஒன்றிய - பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் கழகத் தலைவர் முதல்வர் முக.ஸ்டாலின் அவர்களின் அனுமதி பெற்று விரைவில் நடத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக மீனவர் அணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

<u>டெல்டா மாவட்டங்களில் அடங்கிய</u>

# நெசவாளர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## நன்னியூர் ராஜேந்திரன் அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழக நெசவாளர் அணியின் திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் தெற்கு, தஞ்சாவூர் வடக்கு, தஞ்சாவூர் மையம், தஞ்சாவூர் மாநகரம், மயிலாடுதுறை, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களின் நெசவாளர் அணி நிர்வாகிகள் கூட்டம் 30.10.2023 அன்று காலை 10.00 மணி அளவில் திருவாரூர் கலைஞர் கோட்டம் தயாளு அம்மையார் அரங்கத்தில் என்னுடைய தலைமையில் நெசவாளர் அணி துணைத்தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம் வரவேற்பில் அணியின் மாநில செயலாளர்கள்.எஸ்.எல். டி.ப.சச்சிதானந்தம், க.பழனிச்சாமி, காஞ்சி.தி.அன்பழகன், பரணி.கே.மணி,.நெல்லை சொ.பெருமாள், கே.எம்.நாகராஜன், சிந்துரவிச்சந்திரன் மற்றும் துணைச் செயலாளர்கள் வசந்தம் ஜெயக்குமார், ஜி.வி.மணிமாறன்..கோவிந்தசாமி . ஆ.ராமசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

உயர்கல்வித்துறை அமைச்சர் கழக துணை பொதுச்செயலாளர் க.பொன்முடி, கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர்.காந்தி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, திருவாரூர் மாவட்டக்கழக செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

நன்றியுரை – சுதந்தர குமார், டி.ஆ.அனந்தராமன் மாவட்ட, மாநகர நெசவாளர் அணி நிர்வாகிகள் அனைவரும் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

பொருள்: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, நீட்டு விலக்கு – நமது இலக்கு கையெழுத்து இயக்கம், கழக ஆக்கப்பணிகள்

**நன்னியூர் ராஜேந்திரன்**
தலைவர், தி.மு.க. நெசவாளர் அணி



சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் ஆதிதிராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளியில் மற்றும் விடுதிகளில் பணிபுரியும் ஆசிரியர் / காப்பாளர் சார்ந்த சங்கங்களின் கோரிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நல இயக்குனர் ஆனந்த், பழங்குடியினர் நல இயக்குனர் எஸ்.அண்ணாதுரை, சி.எல்.எஸ் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

<u>த.விக்னேஸ்வரன் தலைமை! எஸ்.முரளி - நந்தனம் கி.மதி முன்னிலையில்</u>

# 125வது வட்டத்தில் இல்லம் தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்!

சென்னை, அக். 27-

சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.விக்னேஸ்வரன் தலைமையில் நாளை 28-10-2023 காலை 10 மணியளவில் இல்லம் தோரும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சி 125வது வட்டம் கயிலாசபுரம், ஆறுமுகம் தெரு, ஏகாம்பரம் தெரு, முனுசாமி தெரு, மீணாம்பாள்புரம், ரூதர்புரம், நொச்சி குப்பம், நொச்சி நகர் ஆகிய பகுதிகளில் பகுதி கழக செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் மதி ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன், வட்ட கழக செயலாளர் அ.தவநேசன், 125வது வார்டு மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி, மாவட்ட துணை அமைப்பாளர்கள் தினேஷ் மாணிக்கம், எஸ்.உமாசங்கர், டேண்டி பிரகாஷ், அஷ்வின் ஆகியோர் வரவேற்பில் இல்லம் தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சியை சென்னை தென் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் பகுதி நிர்வாகிகள் எஸ்.முனுசாமி, பி.எல்.தாஸ், ஏ.குமாரி, எல்.உதயகுமார் வட்ட கழக செயலாளர்கள் ஏ.தாஸ், மா.பா. அன்பு, வி.வெற்றிவேல், கோ. கண்ணன், துரைபார்த்திபன், பா.பொண்னுசாமி மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகள்,மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணியை சார்ந்த நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

பகுதி துணை அமைப்பாளர்கள் தா.தீபன், டி.ஜெகதீஸ் பாபு, கோ.கோபி, அ. பிரிட்டோ, க.ராஜ்குமார் ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.



கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வார்டு 41 ல் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் புதிய நியாய விலை கடை மற்றும் மகளிர் திறன் பயிற்சி மையம் அமைக்க ரூபாய் 29.50 லட்சம் திட்ட மதிப்பீட்டில் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டி திட்டப் பணியை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன், பகுதி கழக செயலாளர் எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், மாமன்ற உறுப்பினர்பா.விமலா, வட்டக் கழக செயலாளர் கி.தேவன், ராம் சசிக்குமார், எஸ்.எல்.சுந்தர், ஆர்.ராஜன் தோழர் லோகநாதன் உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.